www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# சிறீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் ஏன்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மே-1 சிறீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம்

அன்பார்ந்த உழைக்கும் மக்களே!

பணமில்லாதவன் நுழைய முடியாத இடங்கள் பல உண்டு; படிப்பு இல்லாதவன் நுழைய முடியாத இடங்களும் உண்டு; ஆனால் பிறப்பின் காரணமாகவே நுழைய முடியாத இடம் ஒன்று உலகிலேயே நம் நாட்டில் மட்டும்தான் இருக்கிறது. இந்து மதத்தில் மட்டும்தான் இருக்கிறது. அதுதான் கோயில் கருவறை.

''பார்ப்பனன்தான் அர்ச்சகனாக இருந்துவிட்டுப் போகட்டுமே — இது என்ன பெரிய கலெக்டர் உத்தியோகமா?'' என்று உங்களில் சிலர் கேட்கக்கூடும். உண்மைதான். காசு கொடுத்தாலும் அந்த மோசடித் தொழிலுக்குச் செல்வதற்கு ஆத்திகர்களே தயாராக இல்லை. இருப்பினும் அதுவல்ல பிரச்சினை. அப்படி அர்ச்சகனாவதற்கோ கருவறையில் நுழைவதற்கோ பார்ப்பனரல்லாத யாரேனும் முயன்றால் அவர்கள் கம்பி எண்ண வேண்டிவரும் என்பதுதான் பிரச்சினை. 'இட ஒதுக்கீடு' என்ற சொல்லைக் கேட்டவுடனேயே தகுதிக்கும் திறமைக்கும் சமாதி கட்டிவிட்டதாகக் கதறியழும் பார்ப்பனக் கும்பல்தான் அர்ச்சகர் பதவிக்கு மட்டும் தகுதி, திறமை பற்றிப் பேசக்கூடாது என்கிறது. இந்த தீண்டாமைக் கொள்கைக்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு வேறு. அதாவது சட்டப்படி நாமெல்லாம் இழிகுலத்தவர்கள்.

இப்படி பிறப்பைக் காட்டி நம்மை இழிவுபடுத்தும் பார்ப்பனக் கும்பல்தான் இன்றைக்கு கடவுள் நம்பிக்கை உள்ள 'இந்துக்கள்' அனைவரின் பிரதிநிதியாகவும் தன்னை சித்தரித்துக் கொள்கிறது. இந்த மோசடிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேணடுமென்றால் இந்துமதம் என்ற பெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் இந்த பார்ப்பன, மேல்சாதி ஆதிக்க சக்திகளை அம்பலப்படுத்தியாக வேண்டும்.

இதைச் செய்யத் தவறினால் தமிழகமும் அயோத்தியாகும். அந்நிய ஏகாதிபத்தியங்களை நத்திப் பிழைக்கும் பார்ப்பன - பனியா கும்பலின் கையில் சிக்கி நாடே சீரழியும். இன, மொழி, உரிமைகளும், ஜனநாயக உரிமைகளும் இழந்து 'பார்ப்பன ராஷ்டிரத்தின்' சூத்திர அடிமைகளாய் நாம் வாழ நேரிடும்.

எனவே இந்தச் சிறு வெளியீட்டை படியுங்கள்; இப்போராட்டத்தின் நியாயத்தை உணருங்கள்; பார்ப்பன இந்து மதவெறிப் பாசிசத்தின் முகத்திரை கிழிக்க வாருங்கள்!

இவண்

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி**

*இவ்வெளியீட்டிற்கான தகவல் ஆதாரங்கள்:*
*பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடுகள்*

www.tamilarangam.net

## 1. மீண்டும் மனுதர்மக் கொடுங்கோல் ஆட்சியா?

நண்டு கொழுத்தால் வளையில் தங்காது. மசூதியை இடித்துத் தள்ளிய திமிரில், மறுகணமே மனுதர்ம ஆட்சியை அமைக்கத் திட்டம் தீட்டத் தொடங்கி விட்டது பாரதீய ஜனதா கும்பல். தற்போதைய அரசியல் சட்டம் இந்து மதத்திற்கு எதிரானது என்றும், புதிய அரசியல் சட்டமொன்றை மனு தருமத்தின் அடிப்படையில் வகுக்க வேண்டும் என்றும் பார்ப்பனப்பண்டாரங்களின் 'தர்ம சன்சாத்' எனும் அரசியல் நிர்ணய சபை(!) அறிவித்துள்ளது.

''அப்படியானால் ஏற்கனவே இருக்கின்ற அரசியல் சட்டம் உண்மையிலேயே இந்து மதத்திற்கு எதிராகத்தான் இருக்கிறதா?'' என்ற ஐயம் எழக்கூடும். இல்லை. தற்போதைய அரசியல் சட்டத்தை 'மனு தர்மத்தின் மறுபதிப்பு' என்று சரியாகவே சாடினார் பெரியார். அரசியல் சட்டத்தின் பிரிவு - 25 முதல் பிரிவு - 28 வரையிலான நான்கு பிரிவுகளும் 'மத சுதந்திர உரிமை'யை அடிப்படை உரிமையாக அறிவிக்கின்றன. இவை எல்லா மதங்களையும் சேர்ந்த மதவாதிகள் மற்றும் மத நிறுவனங்களின் ஆதிக்கத்தை உத்திரவாதம் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்து மதத்தைப் பொருத்தவரை சாதி முறையையும், பார்ப்பன சாதி ஆதிக்கத்தையும், தீண்டாமையையும் மேற்கூறிய இப்பிரிவுகள் அங்கீகரிக்கின்றன. 1970-இல் தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த ''அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்'' என்னும் சட்டம் மேற்கூறிய சட்டப் பிரிவுகளின் அடிப்படையில்தான் முறியடிக்கப்பட்டது. சாதி அமைப்பைப் பாதுகாத்து அதற்கு சட்டபூர்வமான அங்கீகாரமும் வழங்கும் இந்த அரசியல் சட்டப் பிரிவுகளைக் கொளுத்தியதற்காகத்தான் 1957-இல் பெரியாரும், 3000 திராவிடர் கழகத் தொண்டர்களும் சிறை வைக்கப்பட்டனர். 18 பேர் சிறை நோயால் இறந்தனர். ஆனாலும் காங்கிரசில் செல்வாக்கு பெற்றிருந்த பார்ப்பனக் கும்பல் மசியவில்லை; இப்போது பாரதீய ஜனதா - பார்ப்பனக் கும்பல் மனு தருமத்தையே அரசியல் சட்டமாக்க வேண்டும் என்று வெளிப்படையாக அறிவிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லீம் எதிர்ப்பு வெறியைத் தூண்டி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை ஏய்த்து மீண்டும் அக்கிரகாரத்தின் ஆட்சியை நிறுவத் துடிக்கிறது. சட்டப்படியே சூத்திரன் பஞ்சமன் என்று நம்மை இழிவு படுத்திக் கொண்டே 'இந்து ஒற்றுமை' என்று மாய்மாலம் செய்கிறது. இதை அம்பலமாக்கவும், முறியடிக்கவுமே இந்தப் போராட்டம்.

## 2. கருவறை நுழைவுக் கிளர்ச்சியின் வரலாறு என்ன?

சாதிக்கு அரசியல் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதை எதிர்த்து கருவறை நுழைவுக் கிளர்ச்சி நடத்தப் போவதாக 1970-இல் பெரியார் அறிவித்தார்.

இதையொட்டி, 'இந்து அறநிலையத் திருத்தச் சட்டம்' -1970-இல் தி.மு.க. ஆட்சியால் கொண்டு வரப்பட்டு தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. அர்ச்சகர் பதவி பரம்பரை சொத்து அல்ல என்றும், **தகுதியுள்ள நபர்களை** நியமிக்க அறங்காவலர் குழு அல்லது உரிய அதிகாரிக்கு உரிமை உண்டு என்றும் அச்சட்டம் கூறியது.

உடனே காஞ்சி சங்கராச்சாரியின் தூண்டுதலின் பேரில் உச்ச நீதிமன்றத்தில் 12 ரிட்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆகம விதிப்படி வழிபாடு நடக்கும் கோயில்களில் அர்ச்சகர்களை நியமிக்கும் விசயத்தில் அரசு தலையிட முடியாது என்றும், அது தங்களது பாரம்பரிய உரிமையாக (அதாவது அர்ச்சகன் மகன் அர்ச்சகன் என்று) நீடிக்க வேண்டும் என்றும் பார்ப்பன அர்ச்சகர்கள் வாதாடினார்கள்.

''சாதி வேறுபாடின்றி அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இச்சட்டத் திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருப்பதால் அர்ச்சகர்கள் ஆவதற்கு மாநில அரசு விதிக்கும் சில தகுதிகள், ஆகம விதிகளுக்கு முரணாக இருக்கும்''. அதாவது சாதி கெட்டவனெல்லாம் அர்ச்சகனாகி விடுவான் என்று பார்ப்பனக் கும்பல் நேரடியாகவே கூறியது.

## 3. ''தீண்டாமை சரியே'' — உச்சநீதிமன்றத் தீர்ப்பு!?

அப்பட்டமாக சாதி ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் இந்த வாதத்திற்கு உச்ச நீதிமன்றம் என்ன பதில் கூறியது தெரியுமா?

www.tamilarangam.net

''அர்ச்சகர்கள் நியமிக்கப்படுவது அந்தந்தக் கோயில்களுக் கென்று உள்ள ஆகம விதிகளின்படிதான் நடத்தப்பட வேண் டும். அப்படிச் செய்யத் தவறினால் அது அரசியல் சட்டத்தின் 28-வது பிரிவுக்கு முரணானது மட்டுமல்ல, மத அனுஷ்டானத் தில் அரசு தலையிடும் செயலாகும்; இதன் தவிர்க்க முடியாத விளைவு என்னவென்றால் கோயிலில் உள்ள சாமி சிலை தீட் டுப்பட்டு விடும்''...

''கி.மு. 4 அல்லது 5-வது நூற்றாண்டு முதற்கொண்டு நடைமுறையில் இருந்து வந்துள்ள கோயில் வழிபாடு பற்றிய இந்துமத நம்பிக்கைகளின், பழக்கங்களின் கோட்பாடுகளை நாம் பரிசீலிக்க வேண்டும். கோயில்கள் நிறுவப்பட்டு, அர்ச்ச கர் முறையும் நிறுவப்பட்டதும், சடங்காச்சாரங்கள் பற்றிய நூல் களும் தொகுக்கப்பட்டன. அவைகளே ஆகமங்கள் என்று அழைக்கப்ப்டுகின்றன.''...

''லௌகீக பாமர பக்தர்கள் கோயிலில் கூடும்போது அவர் களுக்கு ஆன்மீக நலன் ஏற்படச் செய்வது, க்டவுள் தீட்டுப்பட் டுவிடாமல் காப்பாற்றுவது - ஆகிய இரண்டு நோக்கங்கள் சடங்காச்சாரங்களுக்கு உண்டு. (வழிபாடு, சடங்காச்சாரம் இன்ன பிற விஷயங்களில் ஆகமங்கள் விதித்துள்ள விதிமுறை களைக் கடுமையாகக் கடைப்பிடிப்பதின் மூலம் இது நடக்கிறது.)

ஆகமத்தின் உள்ளடக்கிய, வழிபாடு சம்பந்தப்பட்ட விதி முறைகளில் ஏதேனும் ஒன்று மீறப்படுமானால், அவற்றில் ஏதே னும் மாற்றம் செய்யப்படுமானால், கடவுளின் உருவம் அசுத் தப்பட்டதாகிவிடும். உண்மையில் சம்பந்தப்பட்ட கோயிலின் புனிதத் தன்மை மீண்டும் பெறப்படுவதற்காக சுத்திகரிப்பு (சம்ப் ரோட்சணம்) சடங்காச்சாரங்கள் நட்த்தப்பட வேண்டும்.

வழிபாடு நடத்துவோர் சடங்காச்சாரங்களுக்கு பெரும் மதிப்பு வைத்திருக்கிறார்கள். அந்த மதத்தின்மீது நம்பிக்கை இல்லாதவர்களான பிற மனிதர்கள் என்னதான் இந்தச் சடங்குக ளைப் பற்றியும், ஆச்சாரங்களைப் பற்றியும் கருதினாலும் அவை இந்து மத நம்பிக்கையில் ஒரு பகுதியே. அவை பகுத்தறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வற்றவை அல்லது மூட நம்பிக்கையானவை என்று நீக்கிவிட முடியாது....

ஆகமங்களால் அங்கீகரிப்படாத ஒரு அர்ச்சகர் தொடுவதன் மூலம் கடவுளின் உருவம் அசுசிப்படுத்தப் படுவதையோ, தீட்டாக்கப் படுவதையோ எந்த ஒரு அரசாங்க நடவடிக்கை அனுமதித்தாலும் அது மிகவும் முக்கியமான வகையில் இந்து மத வழிபடுவோரின் மத நம்பிக்கையிலும், பழக்கத்திலும் கடுமையாகத் தலையிடுவதாகும். அதன் காரணமாக அது அரசியல் சட்டத்தின் 25 (1) வது பிரிவின் கீழ் செல்லுபடியாகாது என்பது முதல் நோக்கிலேயே தெரிவதாகும்.''

இப்படி மிகத் தெளிவாக சாதி ஆதிக்கத்துக்கு வக்காலத்து வாங்கிய உச்ச நீதிமன்றம், போனால் போகிறதென்று மாநில அரசுக்கு ஒரேயொரு 'சலுகை'யை மட்டும் அளித்தது. அதாவது அர்ச்சகர் பதவி என்பது பரம்பரை உரிமை அல்ல என்றும், ஆகம விதிகளின்படி தகுதியான நபரை (பார்ப்பனரை) அரசு நியமிக்கலாம் என்றும் கூறியது.

கோயில் சடங்குகளிலும் ஆச்சாரங்களிலும் தலையிடும் எண்ணத்துடன் அரசாங்கத்தினால் சட்டம் ஏதேனும் உருவாக்கப்பட்டால் அதை எதிர்த்து உடனே நீதிமன்றத்துக்கு வருமாறு பார்ப்பனர்களுக்கு வழியும் சொல்லிக் கொடுத்தது.

### 4. ஆகமங்கள் கூறுவது என்ன?

வைணவக் கோயில்களின் வழிபாட்டு முறையை வகுத்துச் சொல்லும் 'வைகானச ஆகமம்' கீழ்க்கண்டவாறு சொல்கிறது.

''பொது வழிபாட்டுக்கு உரியதான கோயில்களில் கடவுளின் (விஷ்ணு) உருவத்தையோ சிலையையோ, அதிகார பூர்வமாக சடங்குகளை நடத்திவைக்கும் அர்ச்சகன் தவிர வேறு பிராமணன் ஒருவன் தொட்டு விட்டால், அந்தச் சிலை தூய நீரினால் சம்புரோட்சணம் செய்யப்பட வேண்டும். சத்திரியர் (மன்னர் குலத்தினர்) தொட்டுவிட்டால் ஏழு கலசங்களை வைத்து முறைப்படி வணங்கியபின் சம்புரோட்சணம் செய்யப்பட வேண்டும். வைசியர்கள் தொட்டுவிட்டால் 24 கலசங்களை

www.tamilarangam.net

வைத்து முறைப்படி வணங்கி, பிறகு சம்புரோட்சணமும் சாந்தி ஹோமமும், பிராமண போஜனமும் செய்யப்பட வேண்டும்.

சூத்திரன் தொட்டுவிட்டால் 108 கலசங்களை வைத்து முறைப்படி வணங்கியபின் சிலைகளுக்கு சம்புரோட்சணம் (தீட்டு கழித்தல்) செய்யப்பட வேண்டும். மேலும் மகா சாந்தி ஹோமமும், பிராமண போஜனமும் (பிராமணர்க்கு விருந்து) செய்யப்பட வேண்டும். அனுலோமர்களால் (சாதி விட்டுத் திருமணம் செய்தவர்கள்) தொடப்பட்டு விட்டாலும் சூத்திர னுக்கு விதிக்கப்பட்டிருக்கும் பிராயச்சித்தமே செய்யப்பட வேண்டும்.

இரண்டு வைணவ ஆகமங்களும், 28 சைவ ஆகம நூல்க ளும் பார்ப்பானைத் தவிர வேறுயாரும் சிலையைத் தொடக் கூடாது என்றுதான் சொல்கின்றன.

## 5. வழிபாட்டிலும் மொழித் திணிப்பு
## கோயில் கருவறையில் பார் — பார்ப்பனக் கொழுப்பு!

பார்ப்பன ஆகமங்கள் நம்மை மட்டுமல்ல, நமது மொழி யையும்கூட கருவறைக்குள் அனுமதிப்பதில்லை. ஆகமவிதிக ளின்படி தமிழ் நீச பாஷை (இழி மொழி); வழிபாட்டுக்கு உரிய தேவபாஷை வடமொழி மட்டுமே. எனவே கருவறைக்குள் தமிழில் வழிபாடு நடத்துவது ஆகமவிதிகளின்படி குற்றம்; ஆகமவிதிகளை அமல்படுத்துவது பார்ப்பனரின் (இந்து) மத உரிமை என்பதால் தமிழ் வழிபாடு சட்டப்படியும் குற்றம்.

கோயில்களில் ஓதுவார்கள் தேவாரம் திருவாசகம் ஓத வில்லையா, திவ்வியப் பிரபந்தம் பாடவில்லையா என்று பார்ப்பன (இந்து) முன்னணி குறுக்குக் கேள்வி போடும். உண் மைதான்; ஆனால் அவையெல்லாம் கருவறைக்கு வெளியே தான். வெளியே தமிழில் என்ன, ஆங்கிலத்திலும் பாடலாம். உள்ளே ஏன் கூடாது என்பதுதான் கேள்வி. 'தென்னாடுடைய சிவனுக்கு' சமஸ்கிருதத்தில் பூசை ஏன் என்பதே கேள்வி.

சொந்த மண்ணின் தாய்மொழியில் வழிபாடு நடத்துவதே மத ஆச்சாரத்திற்கு விரோதமானது என்று ஒரு மதம் சொன் னால் அந்த மதத்தில் மானங்கெட்டவனைத் தவிர வேறுயார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
இருக்க முடியும்? சட்டப்படியும் இதுதான் சரி என்று சொன்னால் அந்த சட்டத்திற்கு தீ வைக்காமல் வேறென்ன செய்ய?

## 6. 'சூத்திரன்' கொடுக்கும் காசுக்கு தீட்டு இல்லையா?

இந்த ஆகமங்களை சிவனும் விஷ்ணுவும் இரண்டு முனிவர்களுக்கு அருளிச் செய்ததாகவும், பிறகு அந்த முனிவர்கள் இவற்றைத் தொகுத்ததாகவும் அபிதான சிந்தாமணி எனும் நூல் கூறுகிறது. தனக்கு எந்தமாதிரியாக கோயில் கட்ட வேண்டும், என்ன படையல் செய்ய வேண்டும், எந்த சாதிக்காரன் பூசை செய்ய வேண்டும் என்று கடவுளே நேரில் சொல்லியிருக்கிறாராம்.

எல்லாம் வல்ல பரப்பிரம்மமான கடவுளே சாதி பாராட்டியிருக்கிறார் என்பது ஒருபுறம் கிடக்கட்டும்; சைவத்துக்கும் வைணவத்துக்கும் சேர்ந்து ஒரே ஆகமமாக சொல்லிவைக்கக் கூடாதா? சிவன் கோயில் கருவறைக்குள் வைணவ பார்ப்பான் வரக்கூடாது என்றும், வைணவக் கோயில் கருவறைக்குள் சைவப் பார்ப்பான் வரக்கூடாது என்றும் சொல்லி கடவுளே துவேசத்தை மூட்டி விடலாமா? சரி - அதுதான் போகட்டும். சைவத்துக்கு ஒன்று வைணவத்துக்கு ஒன்று - என இரண்டு ஆகமங்களுடன் கதையை முடித்துக் கொள்ளக் கூடாதா? ஒன்றுக்கொன்று முரணான 30 ஆகமவிதிகள் எதற்கு?

இது மட்டுமா? கர்ப்ப கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், துவாரபாலகர், ராஜ கோபுரம், விமானம், ஏழு பிரகாரங்கள், துவஜஸ்தம்பம், பலிபீடம், திருக்குளம் என்று ஊரில் பேர் பாதியை அடைத்துக் கொண்டிருக்கின்றன தமிழ்நாட்டுக் கோயில்கள்; ஆனால் காசியிலும் காஷ்மீரிலும், கேரளத்திலும் உள்ள கோயில்களுக்கு இவையெதுவும் இல்லையே ஏன்?

காசி விசுவநாதர் கோயிலில் கருவறைக்குச் சென்று சாமியைக் கட்டிப்பிடித்து எல்லோரும் வழிபடுகிறார்களே ரங்கநாதனைத் தொடவே கூடாது என்பது ஏன்? நம் ஊரிலேயே கருவறைக்குள் இருக்கும் சிலையைத் தவிர வெளியிலுள்ள மற்ற சிலைகளை (கடவுள்களை) எல்லோரும் தொடுகின்றனரே, இதற்கு தீட்டு இல்லையா?

www.tamilarangam.net

கோயில் விளக்குக்கு விளக்கெண்ணெய் ஊற்ற வேண்டுமா, வேப்பெண்ணெய் ஊற்றவேண்டுமா போன்ற 'வெகு நுணுக்கமான' விசயங்களைக்கூட ஆகமவிதியாக அருளிச் செய்த பகவான், கோயிலில் டியூப் லைட், மின்விசிறி போடுவதைப் பற்றியும், குளிர்சாதன வசதி செய்வதைப் பற்றியும், கோபுரத்துக்கு மேலே நியான் விளக்கு போடுவது பற்றியும், டிராக்டரையும் புல்டோசரையும் வைத்து தேர் இழுப்பது பற்றியும் எதுவும் சொல்லவில்லையே. இதையெல்லாம் செய்வது ஆகமவிதிகளுக்கு முரண் இல்லையா?

''கடல் தாண்டுபவன் பார்ப்பானே அல்ல'' என்று சாத்திரம் சொல்லும் போது கடவுளையே கடல் தாண்டிக் கொண்டு போய் அமெரிக்கா போன்ற 'மிலேச்ச' தேசங்களில் வைத்து ஆறுகாலப் பூசை செய்வதை ஆகமம் அனுமதிக்கிறதா?

தாழ்த்தப்பட்டவன் கோயிலுக்கு உள்ளேயே நுழையக் கூடாது என்றும், சூத்திரன் கொடிமரம் வரைதான் வரலாம் என்றும் ஆகமவிதிகள் கூறும்போது, அவர்கள் போடும் காசை வைத்து பகவானுக்கு படையல் செய்வதும், பார்ப்பனர்கள் வயிறு வளர்ப்பதும் ஆகமவிதிப்படி குற்றமில்லையா? சூத்திரன் கருவறைக்குள் நுழைய உரிமை இல்லை என்றால் மனுநீதியும் ஆகமங்களும் கூறும் ஒழுக்கநெறிகளை அர்ச்சகர்கள் கடைப்பிடிக்கிறார்களா? இதையெல்லாம் சோதித்துப் பார்ப்பது யார்?

எந்தக் கேள்விக்கும் இந்து முன்னணிக் கும்பலோ சங்கராச் சாரியோ பதில் சொல்ல முடியாது. ''இவையெல்லாம் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப செய்யப்படும் சிறிய மாறுதல்கள்; ஆனால் அடிப்படையானவற்றை மாற்ற முடியாது'' என்று சமாளிப்பார்கள்.

அது என்ன அடிப்படையான விசயம்? சூத்திரரையும், பஞ்சமரையும் கருவறைக்கு உள்ளே விடக்கூடாது; தமிழ் வழிபாடு கூடாது; பார்ப்பனன் மட்டுமே அர்ச்சகனாக இருக்கலாம். இவைதான் அடிப்படை விசயங்கள்.

www.tamilarangam.net

## 7. மகா விஷ்ணுவுக்கு இருக்கும் ஆகமம் மதுரை வீரனுக்கு இல்லாத மர்மம் என்ன?

மதுரை மீனாட்சியும் இந்து கடவுள், மதுரை வீரனும் இந்து கடவுள் என்கிறது இந்து முன்னணி. மதுரை மீனாட்சி கோயிலுக்கு பார்ப்பனன்தான் அர்ச்சகன். மதுரை வீரனுக்கோ 'சூத்திரன்' தான் பூசாரி. மதுரை மீனாட்சியை 'சூத்திரன்' தொட்டால் சாமி சிலைக்கு தீட்டுப்பட்டு, 'பவர்' (சக்தி) போய்விடும் என்கிறது ஆகமவிதி. ஆனால் மதுரை வீரனுக்கு மட்டும் 'பவர்' போகாதது ஏன்? மீனாட்சியை விட மதுரைவீரனுக்கு சக்தி அதிகம் என்று பொருளா?

தில்லை நடராசனுக்கும், சிறீரங்கம் ரங்கநாதனுக்கும், மயிலை கபாலீசுவரனுக்கும், ஆகமவிதி வைத்த பார்ப்பனர்கள் மதுரை வீரனுக்கும், மாரியாயிக்கும், முனியாண்டவனுக்கும் மட்டும் வைக்காதது ஏன்? ரங்கநாதனுக்கு சமஸ்கிருதத்தில் பேசினால்தான் புரியும் என்றால் முனியாண்டவருக்கு தமிழ் மட்டும்தானே புரிகிறது. ரங்கநாதனுக்கு புளியோதரை நைவேத்தியம் - குழுமாயி அம்மனுக்கு கிடா வெட்டு ஏன்? ஆரூரானுக்கு ஆயிரம் வேலி நிலம் - அங்காள பரமேசுவரிக்கு அரைக்குந்துமணி நகைகூட இல்லாதது ஏன்?

அரங்கநாதனும், தில்லை நடராசனும் ஊருக்கு நடுவே ஏக்கர் கணக்கில் இடத்தை வளைத்துக் கொண்டு எழுந்தருளியிருக்கும் போது, முனியாண்டவர் வகையறா மட்டும் எல்லா ஊரிலும் ஊர்க்கோடியில் மரத்தடியில் ஒண்டியிருப்பது ஏன்? ஆயிரக்கணக்கில் செலவு செய்து பத்ரிநாத்துக்கு தீர்த்தயாத்திரை போகும் பார்ப்பனர்கள், அடுத்த தெருவில் இருக்கும் அரவான் சாமியைக் கும்பிட வராதது ஏன்? நாயன்மார்களும் ஆழ்வார்களும் முனியாண்டவன் மீது ஒரேயொரு பாசுரம்கூட பாடாதது ஏன்?

இப்படி ஏன், ஏன் என்று ஆயிரம் கேள்விகள் கேட்க முடியும். ஆனால் எல்லா கேள்விகளுக்கும் பதில் ஒன்றே ஒன்றுதான். இந்துமதம் எனப்படும் பார்ப்பன மதம் மனிதனை மட்டுமல்ல, அவன் வணங்கும் கடவுளையும் சாதிவாரியாகப் பிரித்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருக்கிறது. வேதாகமங்களும், அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகங்களும், ஆறுகாலப் பூசையும் அவாளின் கடவுளுக்குத்தான். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் பாரம்பரியமான கடவுள்களின் பெயர்களை வேதங்களிலும் புராணங்களிலும் சல்லடை போட்டு சலித்தாலும் எடுக்க முடியாது.

மேற்சொன்ன பெரிய கோயில்களுக்கு உள்ளேயும், பாடல்பெற்ற திருத்தலங்களுக்கு உள்ளேயும் தாழ்த்தப்பட்டவர்களை சமீபகாலம் வரை இந்தக் கும்பல் அனுமதித்ததில்லை.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நாசிக் கோயிலில் நுழைவதற்கு உரிமை கோரி, அம்பேத்கர் தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்கள் போராடியபோதும், குருவாயூர் கோயிலில் நுழைய கேளப்பன் போராடியபோதும் அதை எதிர்த்தவர்கள்தான் இந்து முன்னணியின் மூதாதைகளான இந்து மகாசபையினர். அதுமட்டுமல்ல; தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்குள் அனுமதிக்க பிரிட்டிஷ் அரசு சட்டம் இயற்றுமானால் அது ஆகம விதிகளுக்கு முரணானது என்றும், தங்களது மத சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்றும் எச்சரித்தனர். இதை காந்தியும் நயவஞ்சகமாக ஆதரித்தார். வைக்கம் போன்ற 'புனித' நகரங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஊருக்குள்ளே நடப்பதற்காகவே பெரியார் ஒரு போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. தாழ்த்தப்பட்டவனான நந்தன் தன் 'தகுதியை' மறந்து சிதம்பரம் நடராசர் கோயிலுக்கு உள்ளே நுழைய விரும்பிய காரணத்தால் தான் தில்லைவாழ் அந்தணர்களால் உயிருடன் எரிக்கப்பட்டான்.

தங்களுடைய சாதிவெறியை பார்ப்பன மேல்சாதிக் கும்பல் தானாக முன்வந்து மாற்றிக் கொள்ளவில்லை. பெரியார் அம்பேத்கார் போன்றவர்களின் போராட்டத்தால் வேண்டா வெறுப்பாக சீர்திருத்தங்களை சகித்துக் கொண்டனர்.

### 8. ஆகமங்களை உருவாக்கியவர் யார்?

ஆகமங்கள் என்பவை கடவுளால் அருளப்பட்டவை என்றும் பல்லாயிரம் ஆண்டுகளாக இவைதான் கோயில் வழிபாட்டுக்குரிய விதிமுறைகளாக இருந்து வருகின்றன என்றும் கூறுகின்றது இந்து முன்னணி. இது கடைந்தெடுத்த பொய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''வேதங்களை அடிப்படையாகக் கொண்ட ஆரிய மதத்தில் விக்கிரக வழிபாடு இல்லை. இது பின்னாளில் தோன்றிய இழிவுபட்ட ஆராதனையாகும்'' என்று பார்ப்பன மதத்தை ஆதரிக்கும் ஜெர்மன் நிபுணர் மாக்ஸ் முல்லரே கூறுகிறார். பவுத்த மடாலயங்களை ஆக்கிரமித்தும், அவற்றைப் பார்த்து காப்பியடித்தும் உருவாக்கப்பட்டவைதான் கோயில்கள். மக்களை ஏமாற்றி கொள்ளையடிக்க கோயில்களை எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சாணக்கியன் தனது 'அர்த்த சாஸ்திரம்'' எனும் நூலில் தெளிவாக எழுதியுள்ளான்.

சிலை வழிபாடு இழிவானதாகக் கருதப்பட்ட காலத்தில் கோயில்களில் அர்ச்சகனாகப் பணியாற்றுவதற்காக பார்ப்பனர்களைத் தேடிப் பிடித்து பொன்னும், பொருளும், பெண்ணும் (தேவதாசி) தர வேண்டியிருந்தது. கோயில்கள் மற்ற சாதிக்காரர்கள் வழிபடுவதற்கான இடமாக இருந்ததால் அங்கே பணியாற்றிய அர்ச்சகன் பார்ப்பனர்க்குள்ளேயே தாழ்ந்த சாதியாக கருதப்பட்டான். அந்த நிலைமை இன்று வரை மாறவில்லை.

உண்மை இப்படி இருக்கும் போது கருவறைக்குள் மற்றவர்களை அனுமதிக்கக் கூடாது என்று சங்கராச்சாரி, இந்து முன்னணி கும்பல் மூச்சைப் பிடித்துக் கொண்டு எதிர்ப்பது ஏன்?

ஏனென்றால் இந்து மதம் என்னும் மோசடியை நிலை நிறுத்தும் தூண்களாக இன்று கோயில்கள்தான் இருக்கின்றன. பல லட்சம் ஏக்கர் நிலங்களும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகளும், உண்டியல் வசூலும் கோயில்களின் பேரால் நடக்கின்றன. சாதியத்தையும், மூட நம்பிக்கையையும், நிலைத்து நிற்கச்செய்ய பார்ப்பனக் கும்பலுக்கு கோயில் தேவை. இன்றைய சூழலில் மதவெறியைத் தூண்டி மக்களை பிளவு படுத்தவும் இந்து முன்னணி - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு கோயில்கள் அவசியம். எனவேதான் அறநிலையத்துறையை ஒழித்து விட்டு அனைத்தையும் தம் கையில் ஒப்படைக்க வேண்டும் என இவர்கள் கோருகின்றனர்.

www.tamilarangam.net

## 9. சங்கராச்சாரி — இந்து முன்னணி கூட்டுச் சதி!

இன்றோ புதிதாக சதித்திட்டம் ஒன்றைத் தீட்டி செயல்படுத்துகின்றன இந்து முன்னணி - சங்கராச்சாரி கூட்டங்கள். 'கீழ்சாதி' மக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் கோயில்களையும் ஆகமவிதியின் கீழ் கொண்டுவந்து அமுக்கப் பார்க்கின்றன. உண்டியலில் காசு சேர்கிறது என்றால் உடனே அந்தக் கோயிலுக்கு ஒரு 'தலபுராணம்' எழுதிவிடும் கூட்டம்தானே இது. ''லங்காபுரிக்குப் போகும் வழியில் இந்த இடத்தில்தான் ராமபிரான் காலைக்கடன் கழித்தார்'' ''பார்வதியிடம் கோபித்துக் கொண்டு இந்த மரத்தடியில்தான் பரமேசுவரன் வந்து படுத்துக் கொண்டார்'' - என்று ஏதாவது ஒரு புளுகுமூட்டையை அவிழ்த்துவிட்டு, சாமிக்கும் சமஸ்கிருதத்தில், பெயரை மாற்றி ஆகமவிதியில் சேர்த்து கருவறைக்குள் நுழைந்துவிடும் வேலையை பார்ப்பனக் கும்பல் இன்று நேற்றா தொடங்கியது.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர்கூட பார்ப்பனர் அல்லாத பூசாரிகளால் வழிபாடு நடத்தப்பட பழனி கோயில் கைமாறியது எப்படி? இப்படித்தானே! ''பிரபலமாகும் கோயிலை ஆகமவிதிக்குள் கொண்டு வந்து விடலாம்'' என்று பச்சையாக சங்கராச்சாரி 'அருள் வாக்கு' சொல்கிறாரென்றால் இந்த அயோக்கியர்களுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்?

## 10. அரசியல் சட்டத்தில் எங்கே இருக்கிறது மத சார்பின்மை?

தென் ஆப்பிரிக்க வெள்ளை நிற வெறிக்குக்கூட அரசியல் சட்ட அங்கீகாரம் மட்டுமே இருந்தது. இங்கேயோ சாதி, மொழி ஆதிக்கமும், தீண்டாமையும் இந்து (பார்ப்பன) மத அங்கீகாரம் பெற்றுள்ளன. இதற்கு இந்திய அரசியல் சட்டமும் பாதுகாப்பு அளிக்கிறது.

இந்தியா மதசார்பற்ற அரசு என்று பொதுவாக எல்லோராலும் பேசப்படுகிறதே தவிர அரசியல் சட்டம் அவ்வாறு கூறவில்லை. எல்லா மதங்களின் வழிபாட்டு மற்றும் அனுஷ்டான உரிமைகளையும், பிரச்சார உரிமையையும் அடிப்படை உரிமையாக அங்கீகரித்துள்ள அரசியல் சட்டம், நாத்திகப் பிரச்சா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரத்தை அவ்வாறு அங்கீகரிக்கவில்லை. அரசியல் சட்டம் அளித்துள்ள மத உரிமைகள் என்பவை மத வெறியர்களும், நிறுவனங்களும் கொள்ளையடிக்கவும், மூட நம்பிக்கையைப் பிரச்சாரம் செய்யவுமே உரிமை தருகிறது. இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும்.

ஆனால் 'மத அனுஷ்டான உரிமை' இந்து மதத்தைப் பொருத்தவரை பார்ப்பன ஆதிக்கத்தையும், தீண்டாமையையும் பார்ப்பனக் கும்பலின் அடிப்படை உரிமையாக்குகிறது. தீண்டாமை சட்டப்படி குற்றமாயிற்றே என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.

உண்மை தான். ஆனால் அரசியல் சட்டத்தின் 17-வது விதியில் தீண்டாமை என்ற சொல் ஒற்றை மேற்கோளுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. ''இந்த 17-வது விதியில் உள்ள தீண்டாமை என்கிற வார்த்தையை ஒரு அடைப்பில் வைத்துள்ளதற்குக் காரணம், கோயில் கர்ப்பக்கிரகத்தைப் பொருத்த வரையில் உள்ள தீண்டாமை அகற்றப்பட்டுள்ளதாக இதற்கு அர்த்தம் ஆகாது என்பதைக் குறிப்பதற்குத்தான்'' என்று 1972-இல் உச்ச நீதிமன்றம் விளக்கம் கொடுத்தது.

எனவே இந்து மத விவகாரம் என்ற அடிப்படையில் தீண்டாமை பார்ப்பனரின் அடிப்படை உரிமை என அரசியல் சட்டம் அங்கீகரிக்கிறது.

## 11. இந்து மதத்திற்கு முழு சுதந்திரம்! நமக்கோ முழு அடிமைத்தனம்!

சமூக நடவடிக்கைகளில் தீண்டாமை என்பது சட்டப்படி குற்றம் என்கிறது அரசியல் சட்டம். இதுவும்கூட இந்து மத விவகாரங்களில் தலையிடுவதுதான். ஆனால் இதற்கும் ஒப்புக் கொள்ளாவிட்டால் தாழ்த்தப்பட்ட மக்கள் கூண்டோடு மதம் மாறிவிடுவார்களோ, என்ற அச்சத்தில்தான் பார்ப்பன - மேல் சாதிக் கும்பல் இதற்கு ஒப்புக் கொண்டது. இன்றோ, மத மாற்றத் தடைச் சட்டம் கொண்டு வந்து மத மாற்றத்தைத் தடுத்து விட்டு 'தீண்டாமை' எனும் இந்து மதத்தின் அடிப்படை உரிமையை **முழுமையாக** அமல்படுத்த விரும்புகிறது பார்ப்பனக் கும்பல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 12. கம்யூனிஸ்டுகள் மதப் பிரச்சினையில் தலையிடலாமா?

கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக் கொள்வோர் இத்தனை காலம் இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் இருந்ததுதான் தவறு; மவுனம் சாதித்ததுதான் அயோக்கியத்தனம்.

ஒரு கம்யூனிஸ்டு என்பவன் எல்லா வகையான ஆதிக்கங்களையும் எதிர்த்துப் போராட வேண்டும். தொழிலாளியின் மீது முதலாளியும், விவசாயியின் மீது நில்ப்பிரபுவும் செலுத்துகின்ற ஆதிக்கத்தை எதிர்ப்பதுடன் அவனது பணி முடிந்துவிடுவதில்லை. இனம், மொழி, சாதி, மதம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் ஒடுக்கப்ப்டும், சுரண்டப்படும் மக்களுக்கு ஆதரவாகப் போராடுவதுதான் ஒரு உண்மையான கம்யூனிஸ்டின் பணி. அதைத்தான் கம்யூனிசப் புரட்சியாளர்களான நாங்கள் செய்கிறோம்.

ஆனால் பார்ப்பன ஆதிக்கம், இன மொழி ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக வலது, இடது போலி கம்யூனிஸ்டுகள் நேற்றுவரை குரல் கொடுக்காதது மட்டுமல்ல; ஒடுக்குமுறைக்கு ஆதரவாகவும் இருந்து வந்துள்ளனர். இன்று 'இந்து' என்ற போர்வையில் பார்ப்பன மதவெறிக் கும்பல் பேயாட்டம் போடும் போதும் அதை எதிர்க்கத் துணிவில்லாமல் ''இந்து -முஸ்லீம் ஒற்றுமை'' ''ராம்-ரகீம்'' என்று மழுப்பலாகப் பேசித் தனது பார்ப்பன சார்புக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

பிறப்பால் ஒரு சாதி உயர்ந்தது என்றும் மற்றவை தாழ்ந்தனவென்றும் அரசியல் சட்டத்திலேயே எழுதி வைத்திருக்கிறானே, இதை எதிர்க்கத் துப்பில்லாதவன் கம்யூனிஸ்டு என்று தன்னை சொல்லிக் கொள்வது இருக்கட்டும், மனிதன் என்று சொல்லிக் கொள்ளக்கூட அருகதை அற்றவன்.

## 13. ஆத்திகர் பிரச்சினையில் நாத்திகர்கள் தலையிடுவது ஏன்?

இது இந்து முன்னணி பார்ப்பனக் கூட்டத்தின் புளித்துப் போன குதர்க்கவாதம். இப்போது நாம் நடத்துவது கடவுள் நம்பிக்கைக்கு எதிரான போராட்டம் அல்ல; கடவுள் நம்பிக்கை கொண்ட ஏமாளி பக்தர்களை அவர்களுடைய சாதியைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டி வெளியில் நிறுத்திவைத்திருக்கும் பார்ப்பன சாதிவெறிக்கு எதிரான போராட்டம். இதில் கலந்துகொள்ள இருப்பவர்கள் எல்லோரும் நாத்திகர்களும் அல்லர். நியாய உணர்வு் கொண்டவர்கள் யாராக இருந்தாலும் இதில் கலந்து கொள்ளலாம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வீதியில் நடக்க உரிமை வேண்டும் என்று வைக்கம் நகரில் போராட்டம் நடத்திய பெரியார் பிறப்பால் தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்தவரா? கறுப்பின மக்களை நசுக்கும் தென் ஆப்பிரிக்க வெள்ளை நிறவெறிக்கு எதிராக கறுப்பர்கள் மட்டும்தான் போராடுகிறார்களா? நியாய உணர்வு கொண்ட வெள்ளையர்கள் போராடவில்லையா?

''உனக்குத்தான் கடவுள் நம்பிக்கை இல்லையே, நான் கோயிலுக்குள் கொள்ளையடிப்பேன், சிலை திருடுவேன், சாதியைச் சொல்லி இழிவு படுத்துவேன், நீ யார் அதைக் கேட்க?'' என்பதுதான், இந்து முன்னணியின் வாதம். ஆத்திகன் நாத்திகன் என்று சிண்டு முடிந்துவிட்டு தன்னுடைய ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் அக்கிரகாரத்தின் பாரம்பரியமான சூழ்ச்சி இது. சரி,'நாத்திகர்கள் பேசவேண்டாம்' என்று ஒரு வாதத்திற்காக வைத்துக்கொள்வோம். ஆத்திகன் கேட்டால் மட்டும் கருவறைக்குள் விடவா போகிறாய்?

நாத்திகன் பேசக்கூடாது என்றால் நாத்திகர்களை ஏன் ''இந்து சட்டத்தின்'' கீழ் சூத்திரர்களாய் வைத்திருக்கிறாய்? கிறித்தவனாகவோ, முஸ்லீமாகவோ, பார்சியாகவோ, யூதனாகவோ இல்லாத அனைவரையும் விருப்பத்துக்கு விரோதமாக இந்து சட்டத்தின் கீழ் அடைத்துப் போட்டிருக்கிறாயே, அதற்கு உனக்கு யார் உரிமை கொடுத்தது என்பதுதான் நமது கேள்வி.

எனவே இந்த அநீதியைத் தட்டிக் கேட்பது சட்டப்படி நாத்திகர்களின் உரிமை; தார்மீக ரீதியான சமுதாயக் கடமை.

### 14. இது சாதி எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்!

இது ஏதோ கோயில் கருவறைக்குள் நுழைய உரிமை கேட்கும் போராட்டம் மட்டும் அல்ல; சரியாகச் சொன்னால்

www.tamilarangam.net

இது ஒரு சாதி எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்.

அனைத்து சாதியினரும் கருவறைக்குள் சென்று வழிபடவும், அர்ச்சகராகவும் உரிமை வேண்டும் என்கிறோம். இதன் பொருள் என்ன? தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சோ. ்ச ஒருவர் அர்ச்சகராக இருந்து வழிபாடு நடத்துவதையும், 'சாதி ந்துக்கள்' என்று கூறப்படும் அனைவரும் ஏற்கவேண்டும். இதை ஏற்கத் தயாராக இல்லாதவர்கள் பார்ப்பன எதிர்ப்பு சவடால் அடிப்பதில் பயனில்லை. எனவே, சாதி ஆதிக்க மனோபவம் கொண்டிருக்கும் யாரும் இந்தப் போராட்டத்திற்கு வரமுடியாது.

பல கிராமங்களில் உயர்சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்கு உள்ளேகூட அனுமதிப்பதில்லை; தாழ்த்தப்பட்டவர்களின் தெருவில் 'சாமி' போகக்கூடாது என்று சொல்லி கலவரங்கள் பல நடக்கின்றன. இத்தகைய சாதி வெறியர்களுக்கு பார்ப்பன எதிர்ப்பு பேசுவதற்கே உரிமை இல்லை. ஏனெனில் இந்த சாதிவெறிக்குப் பெயர்தான் பார்ப்பனீயம். ஒருவரையொருவர் தாழ்வாகக் கருதி நடத்தும் இந்த சாதி அமைப்புமுறையில் எல்லோருக்கும் மேலே உட்கார்ந்து கொண்டு நாட்டாண்மை செய்கிறது பார்ப்பனக் கும்பல். பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்ப்பதாக இந்த சாதிவெறியர்கள் கூறிக் கொள்வது வெறும் பம்மாத்து. ஏனென்றால் அவர்களும் பார்ப்பன ஆதிக்கக் கும்பலின் நண்பர்களே.

எனவே, சாதி ஆதிக்கத்தையும், பார்ப்பன இந்து மதவெறி பாசிசத்தையும் எதிர்க்க விரும்புபவர்கள் யாராக இருந்தாலும் - ஆத்திகர்களாக இருந்தாலும் சரி, நாத்திகர்களாக இருந்தாலும் சரி - ஒன்றுதிரள வேண்டிய போராட்டம் இது.

- **சிறீரங்கம் கோயில் கருவறைக்குள் நுழைவோம்!**
  **பார்ப்பன ஆதிக்கத்தைக் கருவறுப்போம்!**
- **பார்ப்பன இந்து மதவெறி பாசிசத்தை முறியடிப்போம்!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முழக்கங்கள்

1. இந்து முன்னணி பார்ப்பனக் கும்பலே!
அரங்கநாதனும் 'இந்து', மாரியாத்தாளும் 'இந்து' என்றால்
சிறீரங்கத்து அர்ச்சகனை
மாரியாத்தாளுக்கு கிடா வெட்டச்சொல்
'சூத்திரனை' அரங்கநாதனுக்கு அர்ச்சகனாக்கு!
2. சூத்திரன் சாமி சிலையைத் தொட்டால் தீட்டு என்றால்
சூத்திரன் போடும் காசுக்கு மட்டும் தீட்டு இல்லையா?
மானங்கெட்ட சங்கரார்ச்சாரியே பதில்சொல்!
3. 'அவமானச் சின்னம்' என்று அயோத்தி மசூதியை இடித்த
பாரதீய ஜனதாவே
சூத்திரன், பரயன் என்று எங்களைக்
கருவறைக்கு வெளியில் நிறுத்தும்
உன் ஆலயங்கள் அனைத்தும்
எங்களுக்கு அவமானச் சின்னங்களே!
4. நாத்திகர்களையும் இந்து என்று வரையறுத்து
ஒடுக்கும் 'இந்து சட்டம்' ஒழிக!
5. பார்ப்பானுக்கும் கடவுளுக்குமிடையில்
சமஸ்கிருதம் என்ன சங்கேத மொழியா?
தமிழ் புரியாத கடவுள் தமிழனுக்கு எதற்கு?
6. 'ஒரே மக்கள், ஒரே பண்பாடு ஒரே சட்டம்'
என்று பிதற்றும் இந்து முன்னணியே!

- ஒரே மக்கள் என்றால் சக்கிலியரை
சங்கராச்சாரி ஆக்குவாயா?
- ஒரே மக்கள் என்றால் சூத்திரரை
அர்ச்சகராக்க சட்டமியற்றுவாயா?
- ஒரே பண்பாடு எது?
பார்ப்பனப் பண்பாடு சமஸ்கிருத வழிபாடா?

7. 'பரயனே தெருவில் நுழையாதே' - என்று சொன்னால் சட்டப்படி
குற்றம் ''பரயனே, சூத்திரனே! கோயில் கருவறைக்குள் நுழையாதே'' - என்று சொல்வது சட்டப்படி பார்ப்பானின் உரிமை!
மனுநீதியின் மறுபதிப்பான இந்திய அரசியல் சட்டம் ஒழிக!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்து மதத்தவன் என்று தன்னைச் சொல்கிற எந்த சாதியைச் சேர்ந்தவராயினும் அவருக்கு புரோகிதர் ஆகும் உரிமை இருக்க வேண்டும்... திறமை என்பது எள்ளளவும் தேவை இல்லாத ஒரே தொழில் புரோகிதத் தொழில் ஒன்றுதான். இந்து புரோகிதனின் தொழில்தான சட்டத்துக்கு உட்படாத ஒரே தொழிலாக இருந்து வருகிறது. அறிவு நிலையில் புரோகிதன் மூடனாக இருக்கலாம். உடல்நிலையில் பால்வினை நோய்களாகிய மேகநோய், வெட்டை நோய் உடையவனாக இருக்கலாம். ஒழுக்கத்தில் சீரழிந்தவனாக இருக்கலாம். எப்படி இருந்தாலும் அந்தப் புரோகிதன் பவித்திரமான சடங்குகளை நடத்தும் இந்துக் கோவிலில் உள்ள மிகப் புனிதமான மூலஸ்தானங்களில் நுழையவும், இந்துக் கடவுளை வணங்கவும் தகுதி படைத்தவனாக இருக்கிறான்...

இந்துக்களுக்கு இடையே இது சாத்தியமாக இருப்பது எப்படி? இந்துக்களில் புரோகிதனாக இருக்க புரோகித சாதியில் பிறந்திருப்பதே போதுமானது என்ற நிலை இருப்பதால்தான்... எல்லாமே கேவலமாக இருக்கிறது. இந்துக்களில் உள்ள புரோகித வகுப்பு சட்டத்துக்கோ, ஒழுக்கத்துக்கோ கட்டுப்படாத காரணத்தாலதானே இந்த நிலை? புரோகித வகுப்பு தன்னுடைய கடமைகள் என்று எதையுமே ஏற்றுக்கொள்ளவில்லை. தனக்கு என்று உரிமைகளும் தனிச்சலுகைகளும் இருப்பது மட்டுமே புரோகித வகுப்புக்குத் தெரியும்...

சாதிக்கோட்டையில் பிளவு ஏற்படுத்த வேண்டுமென்றால் பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் ஒரு சிறிதும் இடம் கொடுக்காத வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் வெடிவைத்தே தீரவேண்டும். சுருதிகள், ஸ்மிருதிகளாலான மதத்தை அழித்தொழிக்க வேண்டும். வேறு எந்தச் செயலும் பயன்தராது. இது வே என் முடிவான கருத்தாகும்.

— அம்பேத்கர்

(சாதி ஒழிப்பு எனும் நூலில்)

கோயிலுக்குப் போகாமல் எவன் இருக்கிறான்? கோயிலுக்குப் போகணும், என்கிறான்; குளிக்கிறான், முழுகுகிறான், பட்டு கட்டிக்கிறான்; எட்டிக் குதித்துக்கிட்டுப் போகிறான் — 'ஏன்டா' என்றால், 'தீட்டாகிறது' என்கிறான். (ஆனால்) கோயில்கிட்டே போனதும், 'டக்'கென்று வெளியே நின்று கொள்கிறானே, வாசற்படிக்கிட்டே! 'ஏன்டா, மடையா அங்கே நிற்கிறாய்' என்றால், 'நான் சூத்திரன்; உள்ளே போகலாமா?' என்கிறான். எப்போது? 1973-லே! நாம் ஒரு நாடு — நாம் ஒரு சமுதாயம் — நமக்கு மானம், அவமானம் என்கிறது ஒன்று இருக்கிறது என்று சொல்ல முடியுமா?...

இறுதிச் சொற்பொழிவு — பெரியார்

www.tamilarangam.net

வாங்கிவிட்டீர்களா?




மக்கள்
கலை இலக்கியக்
கழகத்தின்
புதிய
பாடல்
ஒலிப்பேழை

பார்ப்பன இந்து மதவெறிக்கு
எதிரான போர்முழக்கம்

SEELAN BOOKS
SIGNATURE
WORLD

விலை: ரூ.30/-
பதிவு அஞ்சல் கட்டணம்: ரூ.12/-
முகவரி: ஆர்.சீனிவாசன், 45 செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம், சென்னை-49

ம.க.இ.க.வின் எல்லா கிளைகளிலும் கிடைக்கும்.

படியுங்கள்

**புதிய கலாச்சாரம்**
ம.க.இ.க.வின் மாத இதழ்

**புதிய ஜனநாயகம்**
மாதமிருமுறை அரசியல் ஏடு

○ வெளியீடு: மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு ○ முதற்பதிப்பு: ஏப்ரல் '93 ○ நன்கொடை: ரூ. 2/- ○ ஒளி அச்சுக்கோர்வை: எழில் பிரிண்ட்ஸ், 321, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை-24. ○ பிரதிகளுக்கு: ஆர்.சீனிவாசன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்